[டாக்டர் க. பொன்முடி] [2007 ஜனவரி 27

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2007) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

6. அறிவிப்பு

பேரவை நடவடிக்கைகள் குறித்த வழக்குகளில் நீதிமன்றங்களின் ஆணைகள், அறிவுறுத்தல்களைச் செயலாளர் மற்றும் அலுவலர்கள் ஏற்க வேண்டியதில்லை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓர் அறிவிப்பு. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இந்தப் பேரவைக்கு அளிக்கப்பட்டுள்ள இறையாண்மையைப் பாதிக்கின்ற வகையில் பேரவை நடவடிக்கைகளை விசாரணைக்கு ஆட்படுத்தித் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் குறித்து நீதிமன்றம்மூலம் அனுப்பப்படும் எந்தவொரு ஆணையோ, அறிவுறுத்தலோ இப்பேரவையைக் கட்டுப்படுத்தாது. எனவே, இப்பேரவையின் ஆணைகளை நிறைவேற்றி வைக்கின்ற பொறுப்பில் உள்ள பேரவைச் செயலாளரோ அல்லது செயலகத்தின் ஏனைய அதிகாரிகளோ நீதிமன்றம்மூலம் அனுப்பப்படும் எவ்வித நோட்டீசையோ, ஆணையையோ, அறிவுறுத்தலையோ ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை எனப் பேரவையின் அனுமதியோடு நான் ஆணையிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)